[*1995 ஏப்ரல் 5*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையங்களிலே உணவுப் பொட்டலங்களை விற்கின்ற அந்த நிலை இருக்கிறதே, அது பலவிதமான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பேருந்து நிற்கின்ற இடங்களிலே அதிக விலையிலே அங்கே ஓட்டல்களிலே பொருள்கள் விற்கப்படுகின்றன என்கின்ற அந்தக் கூற்றை ஏற்க முடியாது. பேருந்துகள் நிற்கின்ற இடங்களிலே இருக்கின்ற ஓட்டல்களிலே விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிர்ணயிக்கப்பட்ட விலையில்தான் அவர்கள் விற்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், பேருந்து நிலையங்களிலே உணவுப் பொட்டலங்கள் வழங்குவது என்பது, பல்வேறு உள்ளாட்சித் துறையினுடைய உரிமங்களுக்கு உட்பட்டதாக இருக்கிறது. பேருந்து நிலையங்களில் பயணிகளுக்கு டீ, காபி, எலுமிச்சம்பழ சாதம், தயிர் சாதம், சாம்பார் சாதம், புளிசாதம் மற்றும் இட்லி, வடை போன்ற பொருள்களை இன்றைக்கு சேலத்திலே இருக்கிற பொன்னி கூட்டுறவுச் சிறப்பங்காடி மூலமாக பழைய பேருந்து நிலையத்திலே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கடை, கூட்டுறவுத் துறையின் மூலமாக நடத்தப்படுகிறது. அப்படி, கூட்டுறவுச் சட்டத்திற்கு உட்பட்டு ஒரு 25 உறுப்பினர்கள் இதற்கு முன்வருவார்களானால் இந்த அரசு நிச்சயமாக அதை ஏற்கும். சுகாதார முறைப்படி அந்த உணவுப் பொட்டலங்களை வழங்குவதற்கு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்படும். குறிப்பாக, இதிலே பெண்கள் முன்வருவார்களானால் அவர்களுக்கு முன்னுரிமையும் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 239, திரு. டி.. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வினா எண் 240, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

240—

கன்னியாகுமரியில் மீன் அருங்காட்சியகம் அமைத்தல்

*25226—**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

1995 ஏப்ரல் 5]

கன்னியாகுமரியில் மீன் அருங்காட்சியகம் (Aquarium) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரியில் மீன் காட்சியகம் அமைக்க சாத்தியக்கூறுகளை கண்டறிந்து, அறிக்கை தயாரிக்க கருதப்பட்டு, அந்த அறிக்கையின் அடிப்படையிலே தோராய மதிப்பீடாக இரண்டு மதிப்பீடுகள் முறையே 16 லட்சம் ரூபாய் செலவிலும், 42 லட்சம் ரூபாய் செலவிலும் மீன் காட்சியகம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு, இத்தொகையை ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையில், இக்கருத்துருவும் நிதிநிலைக் குழுவால் ஏற்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, இந்தியாவிலே உள்ள ஒரு சிறப்பான சுற்றுலா மையம். இங்கு உள்நாட்டினர் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்றார்கள். இங்கு ஒரு மீன் அருங்காட்சியகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அதற்கென திட்ட மதிப்பீடும் எடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதை செயலாக்கம் செய்ய முடியாது என்றும் இங்கே கருத்துக் கூறியிருக்கிறார்கள். எனவே, அதை மறுபரிசீலனை செய்து கன்னியாகுமரியில் மீன் அருங்காட்சியகம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் காட்சியகம் பார்வையாளர்களுக்கு ஒரு பொழுதுபோக்காக அமைகின்றதோடு, இது சுற்றுப்புறச் சூழலில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுடன் அங்கு கிடைக்கும் உள்நாட்டு கடல் உயிரின மாதிரிகளையும் இந்த மீன் காட்சியகம் பாதுகாக்கும். பெரும் அளவிலான பலவகையான பவளங்கள் மற்றும் பவள மீன்கள், ஊர்வன போன்றவை, இரத்த சிகப்பு ஊர்வன, சிகப்பு ஊர்வன கிளிஞ்சல் மீன்கள் மற்றும் இரால் குஞ்சுகள் மற்றும் முத்து வகைகள், மட்டி சங்குகள், சிப்பி வகைகள் மற்றும் சிப்பி மீன்கள் போன்றவற்றை இங்கு காட்சிப் பொருளாக வைக்கலாம். இந்த எல்லா வகையான மீன்களும் வியாபார முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவற்றைக் கைப்பற்றும் மீன்கள், வளர்ப்பு மீன்கள், மீன் உணவு பதப்படுத்துதல் மற்றும் கடல் பொருள்கள் ஏற்றுமதி செய்தல் போன்றவைகளாகக்

காட்சியளிக்கும்படி செய்தல், இதனை ஊக்குவிப்பதற்காக தனியார் தொழில் துறை உரிமையாளர்கள், மீன் வளர்ப்பதற்கு ஊக்கம் அளிப்பதோடு, அலங்கார மீன் வகைகளையும் வளர்க்கும் இந்த மீன் காட்சியகம் ஊக்குவிக்கின்ற இந்த முக்கியமான காரணங்களை மையமாக வைத்து வருகின்ற நிதியாண்டினிலே மீண்டும் நிதிநிலைக் குழுவினிலே இதனை முன்வைத்து இதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

236—

மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

38108—**திரு. சா. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் வட்டம், மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : அரசு ஆணை எம்.எஸ்.585, கல்வி, நாள் 14-7-94-ன்படி, 1994-95 கல்வியாண்டில் திண்டிவனம் கல்வி மாவட்டம் மைலம் ஒன்றியத்தில் புலியனூர் கிராமத்தில் உள்ள துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

239—

சென்னையில் புதிய பேருந்து நிலையங்கள் அமைத்தல்

9919—**திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS